DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC.310/2022

Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | :திரு. அர்ச்சுணன் | Caste: |
| Father's Name | : கணேசன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

27.07.2026 – 12.20 PM

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

அரசு தரப்பில் முதல் விசாரணை:–

1. நான் கூடலாவூரணி கிராமத்தில் குடியிருந்து பத்திரிக்கை நிருபராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். கடந்த 27.08.2021ம் தேதி எனது அப்பா கமுதியில் உள்ள SBI வங்கி ATMக்கு பணம் எடுப்பதற்காக வந்த போது அவருக்கு முன்பாக வரிசையில் நின்று கொண்டிருந்த முகக்கவசம் அணிந்த ஒரு நபரிடம் ATM கார்டை கொடுத்து ரூ.4000/– பணம் எடுத்துக் கொடுக்குமாறு உதவி கோரியுள்ளார். அந்த நபரும் உதவி செய்வதாக கூறி ATM கார்டை பெற்றுக் கொண்டு மெசினில் போட்டு ரூ.4000/– எனது தகப்பனாரிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு மீண்டும் கார்டை கொடுத்துவிட்டு சென்றுள்ளார்.

2. பிறகு எனது தகப்பனார் வங்கியில் அடகு வைத்த நகைக்கு வட்டி கட்ட கடந்த 20.09.2021ம் தேதி மீண்டும் வங்கிக்கு சென்ற போது வங்கி கணக்கில் பணம் இல்லை என்று எனது தகப்பனாருக்கு தெரிய வந்துள்ளது. அதனால் வங்கி ஊழியர்களிடம் கேட்ட போது எனது தகப்பனாரின் ATM கார்டை உபயோகித்து சுமார் 6 முறை மொத்தமாக 36,100/–ரூபாய் எடுத்திருப்பது தெரிய வந்துள்ளது. எனது தகப்பனார் வங்கி ஊழியர்களிடம் அவரது ATM கார்டை காண்பித்து பணம் எடுக்கவில்லை என்று கூறிய போது எனது தகப்பனாரின் கையில் இருந்து ATM கார்டு வேறு ஒருவருக்கு சொந்தமானது என்றும், எனது தகப்பனாருக்கு சொந்தமில்லாதது என்றும் தெரிய வந்துள்ளது. இந்த

விபரங்களை எனது தகப்பனார் வீட்டிற்கு வந்து எங்களிடம் கூறினார். பிறகு அன்றைய தினமே இரவு 08.00 மணியளவில் எனது தகப்பனார் கமுதி காவல்நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றாலும், எனது தகப்பனார் கூறி தெரிந்து கொண்டேன் என்றாலும் சரிதான். நான் விருதுநகரில் உள்ள ஒரு தனியார் தொலைகாட்சியில் நிருபராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு குறிப்பிட்டு இவ்வளவு நேரம் பணி என்று கிடையாது. செய்தி கிடைத்தால் நான் பணிக்கு செல்வேன். என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.07.27 16:44:53 +0530